பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 24 சனிக்கிழமை (07.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 131

# மன்னார்க் கடலில் மோதல் 'வோட்டஜெற்' படகு சேதம்!

## கடற்புலி–கடற்படை ரோந்து அணிகள் ஒன்றை ஒன்று வழிமறித்துச் சண்டை

கொழும்பு, ஏப்ரல் 07

மன்னார் கடற்பகுதியில் நேற்றுமுற்பகல் 11.15 மணியளவில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே திடீர் மோதல் இடம்பெற்றிருக்கிறது.

இரு தரப்புகளின் ரோந்து அணிகள் ஒன்றை ஒன்று எதிர்கொண்டவேளை இந்த மோதல் வெடித்தது என்று கூறப்படுகிறது. மோதலில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக முரணான தகவல்களை இரு தரப்புகளும் வெளியிட்டிருக்கின்றன.

இந்தச் சண்டையில் கடற்படையின் 'வோட்ட ஜெற்' படகு ஒன்று சேதங்களுக்கு உள்ளானதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படை அணி ஒன்று தங்களது கடற்பரப்பில் வைத்து கடற்புலிகள் படகு அணி ஒன்றை வழிமறித்தது என்றும் அப்போது மூண்ட சமரில் கடற்படையின் பீரங்கிப் படகு ஒன்றைத் தாங்கள் மூழ்கடித்துள்ளனர் எனவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தங்களது கடற்புலிகளின் ரோந்துப்பிரிவின் தளபதியின் தகவலின்படி சுமார் 15நிமிட நேரம் நீடித்த சமரில் கடற்படையினர் ஏழுபேர் வரை கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளகடற்பரப்பிலேயேஇந்தக்கடற்சண்டை இடம்பெற்றிருக்கிறது என்றும் அவர்கூறி

(03 ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸில் ஈழத்தமிழர்கள் திங்களன்று கண்டனக் கூட்டம்

பாரிஸ், ஏப். 07

பிரான்ஸ்தமிழர்ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டதனைக் கண்டித்து பிரான்ஸ் வாழ் தமிழர்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஒன்றுகூடவுள்ளனர்.

பிரான்ஸ் பொலிஸார்கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் பிரான்ஸில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் 17 பேரைப் பயங்கரவாதிகள் என்ற பெயரில் கைது செய்தமையைக் கண்டித்தே இக்கண்டன ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் 3 தமிழர்கள் கைது

கொழும்பு, ஏப். 07

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று பொலிஸார்மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 3 தமிழர்கள்கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் இரு யுவதிகளும், ஒரு இளைஞரும் அடங்குவர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள தகுந்த ஆதாரங்களை வைத்திராத காரணத்தினாலேயே கைதுசெய்யப்பட்டார்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட மூவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

## இந்திய அணு உலைகளுக்கு வான் புலிகளால் ஆபத்தாம்!

கொழும்பு, ஏப்.07

தென்னிந்தியாவில் உள்ள அணு உலைகளைக் கூட இலக்குவைக்கக்கூடிய வான்படை ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கு இருப்பதாக இந்திய இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் வான்படை வெறும் பல் இல்லாத சிறுபிள்ளைத்தனமானது அல்ல என்பதை இலங்கை இப்போதுதான் முதற்தடவையாக இந்தியாவுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றது என 'ரைம்ஸ் நௌ' என்ற ஊடகத்தை மேற்கோள்காட்டி இந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

புலிகளின் வான்படைப் பலத்தை குறைத்து மதிப்பிட்டு விடவேண்டாம் என இந்தியாவிடம் இலங்கை தெரியப்படுத்தியிருக்கின்றது. ஆனால், வான் புலிகளினால் எழக்கூடிய எந்தச் சவாலையும் இலகு

(03 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மனித உரிமை மீறல் விவகாரம் ஆசிய பசுபிக் உச்சி மாநாட்டில் கிளப்பப்படும்

### ஐ.தே.கவின் பிரதிநிதியாக ஜயலத் செல்கிறார்

கொழும்பு, ஏப். 7

தென்கொரியாவில் இம்மாதம் இடம்பெறவுள்ள 'ஆசிய பசுபிக் உச்சிமாநாட்டில்' ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன கலந்துகொள்ளவுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் கோரல், இடம்பெயர்தல் உட்பட பலதரப்பட்ட மனித உரிமை மீறல்களை அந்த மாநாட்டில் எடுத்துரைக்கப்போவதாக ஜயலத் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட 'யுனிவேர்ஸ் பீஸ் பவுண்டேஷன்' என்ற அமைப்பு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

இதுபற்றி அவர் உதயனுக்குக் கூறுகையில், இலங்கையில் சமாதான முயற்சி முற்றாக நிறுத்தப்பட்டு யுத்தம் ஒன்று இடம்பெற்றுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த சர்வதேச மாநாடு எமக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இலங்கையில் சமாதான முயற்சிகளைத் தீவிரப்படுத்தும் வகையில் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்கொடுக்க இம்மாநாடு உதவிபுரியும்.

முப்படைத்தளபதியாகவும் உள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ளனர் - என்றார் அவர்.

(அ-சி)

## நாகை மாவட்ட மீனவர் மீது இலங்கை கடற்படை வேட்டு

யாழ்ப்பாணம், ஏப்.7

நாகைபட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை மீனவர்கள் கோடியக்கரைப் பகுதியில் நேற்று அதிகாலை மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை அவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். இதில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் முன்னெச்சரிக்கை எதுவும் இன்றி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் - தாம் படகுக்குள் பதுங்கி இருந்து தப்பினர் என்றும் - மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனால் நாகை மாவட்டத்தில் பதற்ற நிலை நிலவுகின்றது. (அ-1)

## கிழக்கு அகதிகளை புத்தாண்டுக்கு முன் சொந்த இடங்களுக்கு அனுப்புங்கள்!

### ஜனாதிபதிக்கு மட்டக்களப்பு எம்.பி. கடிதம்

கொழும்பு, ஏப்.7

படையினரின் ஷெல் தாக்குதல்கள் காரணமாக மட்டக்களப்பு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அகதி முகாம்களில் வாழும் தமிழ்மக்களை, தமிழ் - சிங்கள புதுவருட தினமான இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவையுங்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் இவ்வாறு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கும் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் கடிதங்களை நேற்று அனுப்பி வைத்துள்ளார். (அ-சி)

## மட்டக்களப்பில் கடும் மழை தொடர்கிறது பெரும்பாதிப்பில் 15 ஆயிரம் அகதிகள்

### சர்வதேச சமூகம் உதவக் கோரிக்கை

மட்டக்களப்பு,ஏப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக, இடம்பெயர்ந்து தங்கியுள்ள 15 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக கொட்டகைகளில் வசித்து வந்த அந்த அகதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை பாதுகாப்பான வேறு இடங்களுக்கு மாற்ற அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மழையுடன் கடுங்காற்று வீசுவதால் கொட்டகைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. கொட்டகைக்குள் மழைநீர் புகுந்துள்ளது. அகதிகளின் உடைமைகள் சேதமாகியுள்ளன.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவ சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்று அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிலையத்தின் உயர் அதிகாரியான மைக்கல் ஸ்கெஸ் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக தூதரகத்தின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(03 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு போர் முடுக்கிவிடப்பட வேண்டும்

### அமெரிக்கத் தூதுவரிடம் ஜே.வி.பி. தலைவர்

கொழும்பு,ஏப்.7

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பயங்கரவாதத்துக்கு எதிரான போர்முடுக்கிவிடப்படுவது மிகவும்முக்கியமும் அவசியமுமாகும்.

இவ்வாறு மார்க்சியக் கட்சியான ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பின்போது வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் தமது அரசியல் செயலருடன் ஜே.வி.யின் தலைவர் சோமவன்சவை கட்சித்தலைமையகத்தில் கடந்த வியாழனன்று சந்தித்துப் பேசினார்.

கலந்துரையாடலின் ஒரு கட்டத்தில், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு இருக்கமுடியாது என்று அமெரிக்கத் தூதுவர் எடுத்துக் கூறினார்.

அதனை மறுத்துரைத்த ஜே.வி.பியின் தலைவர், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் இந்நாட்டில் நடத்தப்படுவது இன்றியமையாதது என்று வலியுறுத்திக்கூறினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இருந்து ஜே.வி.பி. விலகியமைக்கான காரணம் என்னவென்று தூதர் பிளேக் கேட்டதற்கு-

ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்ட கூட்டாட்சி யோசனையை நிராகரித்து, பெரும்பான்மையான வாக்காளர்கள் ஒற்றையாட்சிமுறைக்கே, 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஆை

(03 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் நடைபெற்ற இடத்திற்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதைத் தவிர்ப்போம்!
சர்வோதயம் (A/48868) வெண்புறா யுனிசெப்





## இறைச்சிக் கோழி

ஐஸ் புறொயிலர்
இறைச்சி
விற்பனைக்கு
உண்டு.
**NEW R.S.K. FARM**
மான்ஸ் பாடசாலை
வீதி, உடுவில்.

## வாடகைக்கு

விதானையார் வீதி, சுண்டிக்குளியில் 3 அறைகளும் சமயலறை, கோல், கிணறு ஆகியவையும் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: S.S.நாதன்
16/3, விதானையார்
வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P:0776146434


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### இரத்தினராசா சரஸ்வதி
(8 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

தோற்றம் 27-10-1929 மறைவு 08-03-2007

08.03.2007இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.04.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.98, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.
- குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 29 - 05 - 1933



மறைவு 08 - 03 - 2007

### அமரர் யோவான் அருளானந்தம்
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்,
பலாலி தெற்கு, வசாவிளான்.

அன்பும் பண்பும் அறிவாற்றலும்
அடக்கம், அமைதி, கடமை
கண்ணியம், கட்டுப்பாடெனும்
அருங்குணங்கள் யாவும் ஒருங்கமைந்து
கல்வியிற் சிறந்த வித்தகனாய்
கடமையிற் தவறாத கண்ணியவானாய்
தன்னலம் கருதாது பொதுநலப் பணிகளில்
அளப்பரும் சேவைகள் பல புரிந்து
சமூக - சமயப் பணிகளில் தன்னையே அர்ப்பணித்து
வாழும் காலத்திலேயே தூய வாழ்வு வாழ்ந்து
அனைவரதும் அன்புக்கும் மதிப்புக்குமுரியவராய்
சிறந்த இலட்சியவாதியாய்
நெஞ்சுரமும் நேர்மைத்திறனும் கொண்டு
தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்
முன்னுதாரணமான சிறந்த கிராம சேவையாளனாய்
இறை நம்பிக்கையுடன் வாழ்வாங்கு வாழ்ந்து
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு விட்ட எம் அணையாத தீபமே
நித்தமும் இறைவனடி தொழுது
எம் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகள்.

சகோதரி - திருமதி சிந்தாத்திரையம்மா -
அந்தோனிப்பிள்ளை(அன்னதிரவியம்) குடும்பத்தினர் - கனடா.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 - 02 - 1953



உதிர்வு 12 - 04 - 2001

திருமதி
### இந்திரசேனா கனகநாயகம்
(இந்திரா அக்கா)
திதி: 07.04.2007

ஆறு ஆண்டுகள் சென்றாலும் - உங்கள்
நினைவலைகள் நிழலாக என்றும் தொடர்கின்றன.

கணவர், சகோதரர்கள்,
சகோதரிகள்,
மைத்துனர்கள்,
மைத்துனிமார்,
பெறாமக்கள்,
மருமக்கள்.

தகவல்:
வி.கனகநாயகம்(கணவர்),
கனகேந்திரா கொமினிக்கேசன்,
துரைமலர் பொய்கை,
செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு.
இணுவில்.

தொலைபேசி எண்கள்
021 222 3715, 021 4591245,
I.D.D.: 0094 212223715, 0094214591245


கல்வி உலகில் **O/L DAY CLASS** இற்கு
அட்சய பாத்திரம் போல் விளங்குவது

## விக்னா கல்வி நிறுவனம்

இவ்வருடம் 2 இடங்களில்

தலைமையகம்,
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்.

கிளை நிறுவனம்
417,கே.கே.எஸ். வீதி,
யாழ்.

பிரிவு 2
**O/L DAY CLASS** (8.30 - 2.30)
ஆரம்பம் 09.04.2007
புதிய அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படும்

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர
கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sirambiyadi Lane
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 09/04/2006- 09.00
ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I : 06/04/2007, Batch II: 07/04/2007
Batch III: 08/04/2007, Batch IV: 11/04/2007

3 மாதகால
Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 06/04/2007, 07/04/2007
08/04/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### கந்தையா இராசலிங்கம்
(லிங்கம் ஸ்ரோர்ஸ்)

உதிப்பு 05.04.1934
உதிர்வு 02.04.2002
திதி: 07.04.2007
சனிக்கிழமை

பொய் மாயப் பூமியிலே பூத்திருந்தோம் சிறு மலராய்
காயாகிக் கனியாகி களிப்புடனே வாழ்க்கையில்
மெய் சிலிர்க்க உடல் துடிக்க கவர்ந்து சென்றான் காலனவன்
சேய்கள் நாமின்று சிறகிழந்து தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இல. 14, காரைக்காட்டு லேன்,
வண்ணார் பண்ணை.
- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வ.ஐ.நல்லதம்பி
(பிரபல வர்த்தகர், புதுக்கடை, நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வ.ஐ.நல்லதம்பி 03.04.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமணி - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தையலம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மீனாட்சிப்பிள்ளை, அபிராமிப்பிள்ளை, பத்தினிப்பிள்ளை, தமோதரம்பிள்ளை (சமாதான நீதிவான்) மற்றும் சண்முகம்பிள்ளை (வடகாடு), காலஞ்சென்ற அம்பலவாணர் (மன்னார் ஸ்ரோர்ஸ்), சுந்தரம்மா(இந்தியா), மனோன்மணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காமாட்சி, பூரணம்(கனடா), காலஞ்சென்றவர்களான நாகம்மா, மருத லிங்கம்(மருது), கந்தையா, சடையர், கதிரவேலு, காமாட்சி, இராசம்மா, குஞ்சாச்சிப்பிள்ளை, சுப்பிரமணியம், விசுவலிங்கம், பொன்னையா (தபாலகம்), கந்தையா(கனடா), சுந்தரம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் அற்புதராணி (ஜேர்மனி), சற்குணராணி(யாழ்ப்பாணம்), மகேந்திரகுமார்(கனடா),யோகராணி (ஆசிரியை, மல்லாவி ம.வி.), கனகராணி(நெடுந்தீவு), தவராணி (நெடுந்தீவு), பத்மகுமார் (லண்டன்), புவனேஸ்வரகுமார்(நெடுந்தீவு),தர்மகுமார்(V.I.N.மில், நெடுந்தீவு), பத்மராணி (கனடா), சசிகுமார் (உப தலைவர், நெடுந்தீவு ப.நோ. கூ. சங்கம்), விஜிகுமாரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேலாயுதபிள்ளை(ஜேர்மனி), நடராசலிங்கம்(அதிபர், யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம், யாழ்ப்பாணம்), மாலினிதேவி(கனடா), யேசுதாசன்(அதிபர், மல்லாவி மகா வித்தியாலயம்), யோகநாதன் (நெடுந்தீவு), தர்மசூரியர் (நெடுந்தீவு), கமலினி (லண்டன்), விமலதேவி(ஆசிரியை, சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு), சிறி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் அரவிந்தன் (லண்டன்), அனுஜா(இந்தியா), ஜெனனி(ஜேர்மனி), குணாஜினி (கனடா), குகதாசன் (கனடா), கோபிநாத் (யாழ்ப்பாணம்), யாழினி, டைசாஜினி, ஆதவன் (கனடா), லக்கியா (கனடா), அசானா (கனடா), அருட்சிகன், அகிலாஜினி, சஞ்சீவன், இராஜீவன், நிருஜீவன், அருள்ஜீவன், அபினயா, யதுர்சன், சரண்ணியா, ஆதித்தியன்(லண்டன்), லக்சனியா, அபிராம், அருண் (கனடா), செல்விகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.04.2007)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பனங்காணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
3ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
தொ.பே.: 060 221 2436

தையலம்மா (மனைவி),
மக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்று ஒற்றைக் காலில் நிற்கும் தெற்கு

'வட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்றானாம்!' - என்றொரு கிண்டல் பேச்சு வழக்கு வடக்கில் உள்ளது. ஏதோ ஒன்றைக் கேட்க, வேறு ஏதோ ஒன்றுக்குப் பதில் சொல்வதை இப்படி விமர்சிப்பார்கள்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யோசனை என்னவென்று கேட்டால், வேறு ஏதோ பதில் தருகின்றனர் அரசின் அமைச்சர்கள். சிறுபான்மையினரான தமிழர்களுக்கு உரிய அதிகாரங்களை எவ்வளவு தூரத்துக்குப் பிரித்துக் கொடுக்கப் போகின்றார்கள் என்பதே பிரச்சினை. அதைத் தெளிவுபடுத்துவதை விடுத்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து நாடாளுமன்றுக்குப் பதில் தெரிவிக்க வேண்டிய - நிறைவேற்று அதிகாரமுடைய - பிரதமரைக் கொண்ட நாடாளுமன்ற ஆட்சி முறையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது யோசனையில் பிரதிபலிக்கும் என்கிறார் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன.

இலங்கையைச் சிங்களவர்கள் எப்படி ஆட்சி செய்யப்போகின்றார்கள் - நிறைவேற்று அதி கார ஜனாதிபதி முறை மூலமா அல்லது நிறைவேற்று அதிகாரப் பிரதமர் முறை மூலமா- என்பதல்ல சர்ச்சை, தமிழர் தாயகத்துடன் எவ்வளவு தூரத்துக்கு அதிகாரத்தைப் பங்கிட அவர்கள் தயார் என்பதுதான் கேள்வி. அதற்குத் தெளிவான பதில் ஆட்சித்தரப்பில் இருந்து இன்னும் வரவேயில்லை. 'ஒற்றையாட்சிக்குள் அதிக அதிகாரப் பரவலாக்கல்' என்ற உப்புச்சப்பற்ற - ஈழத்தமிழர்களால் ஏற்கனவே நிராகரித்து ஒதுக்கப்பட்ட - பழைய பல்லவியையே சு. க. செயலாளர் ஒப்புவித்திருக்கின்றார்.

ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டம் சுமார் ஆறு தசாப்தகால நீண்ட - நெடிய - கொந்தளிப்பான - வரலாற்றைக் கொண்டதாயினும் அது ஆயுத வழிக்குத் திரும்பியது எழுபதுகளின் கடைசியில்தான்.

அதன் பின்னர் 1985இல், ஈழத் தமிழர்களின் மிதவாதத் தலைமைகளும் தீவிரவாதத் தலைமைகளும் ஒன்றிணைந்து - ஏகோபித்து - தங்களின் இறுதியான, உறுதியான கோரிக்கையை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தின. அதற்கான அரங்காகத் திம்புப் பேச்சுகள் அமைந்தன. அங்கு தமிழர் தரப்பு தமது தீர்க்கப்படவேண்டிய அபிலாஷைகளுக்கு அடிப்படையாக முன்வைத்த மூலக் கோட்பாடுகள் நான்கு. அவை வருமாறு:-

* தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள் என்பதை அங்கீகரித்தல்.
* தமிழர்களுக்கு இனம் காணக்கூடிய தனித்துவமான தாயகம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.
* தமிழர் தேசத்துக்கு எவராலும் பறித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.
* சகல தமிழ மக்களுக்கும் முழுமையான குடியுரிமை மற்றும் அடிப்படையான உரிமைகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளல்.

- இந்த நான்கில் மலையகத் தமிழர் தொடர்பான நான்காவது விடயத்தை மட்டும் சிங்களம் அப்போதே (1985இல்)ஏற்றுக் கொண்டது. குடியுரிமைப் பிரச்சினைக்கு இப்போது ஓரளவு தீர்வும் காணப்பட்டுள்ளது.

தமிழர்களின் ஏனைய மூன்று மூலக் கோட்பாடுகளையும் கொழும்பு அரசு அப்போது நிராகரித்தது.

ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் முதல் இரு கோரிக்கைகளையும் எழுத்தில் ஒப்புக் கொண்டது இலங்கை. (தமிழர்கள் தனித்துவமான இனம் என்றும் வடக்கும், கிழக்கும் அவர்களின் பூர்வீகத் தாயகம் என்றும், அந்த ஒப்பந்தத்தின் ஆரம்ப ஷரத்துகள் தெளிவாகக் கூறுகின்றன.)

அதன் பின்னர், சுமார் பதினைந்து ஆண்டுகள் கழித்து, 2002 டிசெம்பரில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்பட்ட ஒஸ்லோ இணக்கத்தின் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் மூன்றாவது பிரதான கோட்பாடான சுயநிர்ணயஉரிமைக் கோரிக்கையும் இலங்கை அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

"உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில் - ஐக்கிய இலங்கைக்குள் - சமஷ்டி ஆட்சி முறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய" தாங்கள் இணங்குவதை இலங்கை எழுத்தில் அங்கு ஒப்புக் கொண்டதன் மூலம் 'சுயநிர்ணயம்' தொடர்பான தமிழர்களின் மூன்றாவது கோட்பாடும் சிங்களத்தால் ஏற்கப்பட்டது. ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் இணைந்த ஒரு நிர்வாக அமைப்பாக இருந்த தமிழர் தாயகத்தை வடக்கு, கிழக்கு என்று பிரித்து, தமிழர்களின் மூலாதாரக் கோட்பாடுகள் மூன்றையும் அடியோடு நிராகரித்து, சமஷ்டி ஆட்சி முறைத் தீர்வையும் புறந்தள்ளி, ஒற்றையாட்சித தத்துவத்தைக் கெட்டியாகக் கட்டிப்பிடித்து நிற்பதன் மூலம் அமைதித் தீர்வுக்கான வாய்ப்பை முற்றாகவே சீர்குலைத்து சன்னதமாடுகிறது மஹிந்த அரசு.

கடந்த இரண்டரை தசாப்தகாலக் கொடூரப் போருக்கு மத்தியில், இலங்கை அரசு, தான் ஏற்றுக் கொண்ட - தமிழர்களின் மூலாதாரக் கோட்பாடுகள் மூன்றையும் - இப்போது மீளவும் நிராகரித்ததன் மூலம், மீண்டும் பழைய இடத்துக்கே வந்து நிற்கின்றது.

அமைதித் தீர்வு முயற்சியில் தென்னிலங்கைச் சிங்களம் ஆக்கபூர்வமான நிலையில் முன் நகரப் போவதேயில்லை. அது 'சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்ளே' நிற்கின்றது. அதை விட்டுவிலகி, தென்னிலங்கை வரவே மாட்டாது. பரந்த சிந்தனையுடனும், விசால நோக்குடனும், உயர்ந்த விட்டுக்கொடுப்புடனும், தெளிந்த புரிந்துணர்வுடனும் செயற்படும் அரசியல் தீர்க்கதரிசனமும், இனப்பிரச்சினையை சமரசமாகத் தீர்க்கும் நடுநிலைப் போக்கும் கொண்ட தலைமை தென்னிலங்கையில் இல்லவே இல்லை. அங்கு அத்தகைய தலைமை இனிமேலும் உருவாகும் வாய்ப்பில்லை. பௌத்த - சிங்கள மேலாண்மைச் செருக்கிலும், இராணுவ அதிகார மமதையிலும், அடக்கியாளும் திமிரிலும் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கை ஆட்சியாளர்களால் சிறுபான்மையினரின் அபிலாஷைகளைப் புரிந்துகொள்வதோ, அவர்களுக்கு நீதி செய்வதோ இயலாத காரியம். அதைத்தான் வரலாறு எமக்குக் காட்டி நிற்கிறது.

இதுதான் சிங்களத்தின் போக்கும் நிலையும் என்றால் அமைதித் தீர்வுக்கு வாய்ப்பே இருக்காது.

'மயிலே, மயிலே இறகு போடு!' என்று காத்திருப்பதில் அர்த்தமில்லை என்பது தமிழர்களுக்கு எப்போதோ - நன்கு - புரிந்துவிட்டது.

ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்ற - ஆளும் தரப்பின் - தீர்வு யோசனைத்திட்டம் அதை மீள ஒரு தடவை தமிழர்களுக்கு உறுதிப்படுத்துகிறது. அவ்வளவே.

# புத்தாண்டு வியாபாரம் யாழ். நகரில் களைகட்டியது

யாழ்ப்பாணம், ஏப். 6

சித்திரைப் புத்தாண்டையொட்டி யாழ். நகரப் பகுதி களைகட்டத் தொடங்கியுள்ளது.

பொது மக்கள் முண்டியடித்துக் கொண்டு புத்தாண்டுக்குத் தேவையான பொருள்களை நடைபாதை வியாபாரிகளிடமும், வர்த்தக நிலையங்களிலும் கொள்வனவு செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகக் குடாநாட்டில் உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது.

இதனால் நத்தார், ஆங்கில புது வருடம், தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடுவதற்குத் தேவையான உணவுப் பொருள்கள் உட்படப் பாவனைப் பொருள்கள் போதியளவு மக்களுக்குக் கிடைக்கவில்லை.

தற்போது தனியார் வியாபாரிகளால் உணவுப் பொருள்கள், உடுபுடைவைகள் உட்பட அனைத்துப் பொருள்களும் கப்பல் மூலம் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன.

கப்பல் மூலம் தொடர்ச்சியாகப் பெருந்தொகையாக இந்தப் பொருள்கள் எடுத்து வரப்படுவதால் அவற்றின் விலைகளும் குடாநாட்டில் வீழ்ச்சி கண்டுள்ளன.

இதனையடுத்து, புத்தாண்டுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் முந்திய வருடங்களைப் போன்று மும்முரமாக ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருந்தது. அவற்றைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நடைபாதை வியாபாரம் களைகட்டி உள்ளது. வர்த்தக நிலையங்கள் மற்றும் வங்கிகளிலும் மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளதை அவதானிக்க முடிந்தது. (அ-8)

# அடையாள அட்டைகள் செயலகம் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். செயலகத்தில் உள்ள ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகத்துக்கு ஒரு தொகுதி அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

ஆட்பதிவுத் திணைக்களத்தால் கொழும்பில் இருந்து தபால் மூலம் இந்த அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த அடையாள அட்டைகளைத் தரம் பிரித்து உரிய பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-8)

# குளப்பிட்டிச் சந்தியில் நேற்று விபத்து சிப்பாய் மரணம்; பொது மகன் காயம்

கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் சிப்பாயான ஆரியதாச (வயது 30) என்பவர் உயிரிழந்தார். காயமடைந்த கலட்டியைச் சேர்ந்த கே. கோபால கிருஷ்ணன் (வயது 65) யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மோட்டார் சைக்கிளில் வந்த சிப்பாய் வீதியில் சைக்கிளில் சென்ற பொதுமகனுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தசிப்பாய் பலாலி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

யாழ். பதில் நீதிவான் திருமதி. ச. இளங்கோவன் விசாரணைகளை நடத்தினார்.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை அவரது தாயாரிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# சாமியார் வேடமணிந்து வந்தவர்கள் பட்டப்பகலில் ஆயுத முனையில் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஏப்.7

சாமியார் வேடத்தில் வந்தவர்கள் பட்டப்பகலில் துப்பாக்கியைக் காட்டி மதுபான நிலையம் மற்றும் வீடு ஒன்றில் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் ரொக்கப்பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் கடந்த புதன்கிழமை முற்பகல் 12 மணியளவில் இச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நாச்சிமார் கோயிலடி, இராமநாதன் வீதியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் புகுந்த இவர்கள் அங்கிருந்து ரொக்கப்பணம் மற்றும் சாராயம் ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றனர்.

அதன் பின்னர் கொக்குவில் சபாபதி ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த அவர்கள் அங்கிருந்தவர்களை ஆயுத முனையில் மிரட்டித் தடுத்து வைத்தனர். அதன் பின்னர் அங்கிருந்து தாலிக்கொடி உட்பட பலலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித்துக் கொண்டு தப்பிவிட்டனர்.

இச்சம்பவங்கள் குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (அ-1-68)

# குழந்தைகளுக்கான மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.7

சுன்னாகம் கிழக்கு சிவன்பள்ளியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் குழந்தைகளுக்கான இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

கொழும்பு சிறுவர் வைத்தியசாலை வைத்திய நிபுணர் எஸ். சிவகுமார் இந்த மருத்துவ முகாமை நடத்துவார். மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும். (1)

# ஏப்ரல் மாதத்துக்கான பயணப்பதிவு நிறுத்தம்

அவசர தேவைகளின் நிமித்தம் வெளிமாவட்டங்களுக்குச் செல்வோருக்கென யாழ். செயலகம் மேற்கொள்ளும் கப்பல் பயண ஏற்பாட்டில், ஏப்ரல் மாதத்துக்கான பதிவுகள் அனைத்தும் முடிவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனிமேல் பயணம் செய்யவுள்ளோர் மே மாதத்துக்கான பட்டியலிலேயே சேர்க்கப்படுவர். மே மாதத்துக்கான பயணப் பதிவுகள் எதிர்வரும் 28ஆம் திகதியிலிருந்தே மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-8)

# இலங்கை, இந்திய எழுத்தாளர்கள் 40 பேரின் நூல்கள் கொழும்பில் வெளியீடு

கொழும்பு,ஏப். 7

சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினர் இலங்கை - இந்திய எழுத்தாளர்களின் 40 நூல்களை வெளியிடும் நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று ஆரம்பமானது. இன்றும் நாளையும் இந்நிகழ்வு தொடர்ந்து நடைபெறும்

இந்நிகழ்வில் உதயன், சஞ்சீவி பத்திரிகைகளுக்கு தமது ஆக்கங்களை நல்கிய எழுத்தாளர்களின் நூல்களும் வெளியிட்டு வைக்கப் படவுள்ளன.

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் 'மனம் விந்தையானது தான்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூலும் பொ.சண்முகநாத னின் (சண் அங்கிள்) 'சிரிப்போம் சிந்திப்போம்' என்ற கட்டுரைத் தொகுப்பு நூலும் அமரர் மூளாய் அருணாசலத்தின் 'கந்தசஷ்டி சிந்தனைகள்' எனும் நூலும் கோப்பாய் சிவத்தின் 'இது தான் இந்து மதம்' என்ற நூலும் அவற்றில் அடங்கும். (203)

# வடகடல் நிறுவன தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.7

குருநகரில் உள்ள வடகடல் நிறுவனத்தின் வலைத் தொழிற்சாலை, ஐஸ் தொழிற்சாலை ஆகியவற்றை மீள இயக்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்துக்கு பின்னர் உருவான அசாதாரண சூழ்நிலையை அடுத்து இத்தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

இத்தொழிற்சாலைகளை மீள இயக்குவது குறித்து நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டது. யாழ். அரச அதிபர் கே. கணேஷ் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இன்றுள்ளநிலையில்கடற்றொழிலாளர்களுக்கு உதவுவதற்காக இத்தொழிற்சாலையை இயக்குவதன் அவசியம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இத்தொழிற்சாலையை இயக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது என்றும் -

அது மூடப்பட்டதால் வேலை இழந்தவர்களுக்கு சம்பளம் வழங்குவது என்றும் - முடிவுகள் எடுக்கப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

## நாளை

பங்குனி - 25
ஞாயிற்றுக்கிழமை
08.04.2007
திதி: பஞ்சமி
காலை: 06.56
நட்சத்திரம்: [illegible]
முன்னிரவு: 06.24
சுபநேரம் : 09.07 - 10.37
ராகுகாலம் : 04.37 - 06.07

## பிரான்ஸில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய வணிகர் சங்கம் ஒழுங்கு செய்துள்ள இக் கண்டன ஒன்றுகூடலுக்கு இளையோர் அமைப்பு, தமிழ்ப்பெண்கள் அமைப்பு மற்றும் விளையாட்டுக்கழகங்கள் என்பன ஆதரவு வழங்குகின்றன.

## இனப்பிரச்சினைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினர். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் வழங்கப்பட்ட யோசனை கூட்டாட்சியை அடிப்படையாகக் கொண்டது. அதனாலேயே எமது கட்சி அக்குழுவில் இருந்து விலகத் தீர்க்கமானித்தது - என்றார் சோமவன்ச.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்துப் பகிரங்கப்படுத்த வேண்டும். இல்லையேல் இலங்கை மக்கள் அதனைச் சந்தேகக் கண்ணுடனேயே நோக்குவர் - என்றும் அவர் தூதுவரிடம் எடுத்துரைத்தார். (அ)

## இந்திய அணு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக முறியடித்துவிடலாம் என இந்திய அரசு கருதுகின்றது.

எனினும், இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அணு உலை மையங்களைப் பாதுகாப்பின்றி விட்டுவைக்கும் வாய்ப்பை அளிக்காமல் இருப்பதற்காக, அது விடயத்தில் இந்தியா அதிக கவனம் எடுத்துள்ளது.

புலிகள் பயன்படுத்தும் செக் தயாரிப்பு 'ஸிலின்' விமானங்கள் ஆயிரம் கிலோமீற்றருக்குக் கூடிய இலக்கு வரை பயணிக்கக் கூடியன.

புலிகளின் வான்படையால் எழக் கூடிய சவால்களைச் சந்திப்பதற்காக அவற்றை வழிமறிக்கக் கூடிய வகையில் தென்னிந்தியப் பிரதேசத்தில் முக்கிய நவீன 'ராடர்' கருவிகளை இந்தியா மீளவும் பொருத்தி பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

"அவர்களின் விமானங்கள் இலகுவாக வடக்கு நோக்கி (இந்தியாவை நோக்கி) பறக்கக் கூடியவை. புலிகளின் சிறிய விமானங்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய முக்கிய மையங்கள் அங்கு உள்ளன. புலிகளின் வான் படையால் இலங்கைக்கு மட்டுமல்ல, இந்தப் பிராந்தியத்துக்கும், எங்கள் அயல் நாடுகளுக்கும், சர்வதேச விமானப் பதைகளுக்கும் கூட ஆபத்து உள்ளது." - இவ்வாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கொஹன்ன தெரிவித்தார்.

- இப்படி அந்த இணையத்தளச் செய்தி மேலும் தெரிவித்தது. (சி)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்தில் இயங்கும் 14 பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் 41ஆவது வருடாந்தப் பேச்சுத் திறன் விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்துகொள்ள உள்ளார். (1-203)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 7

செயற்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டின் 'ஆனந்தத் தாண்டவம்' எனும் சிறுவர் மகிழ் அரங்க நிகழ்வு இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கைதடி, நாவற்குழி பிரதேசங்களைச் சேர்ந்த பத்துக் கிராம சிறுவர் கழகங்களின் நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. (1)

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிலையத்தின் உயர் அதிகாரியாகச் சேவையாற்றும் "மைக்கல் ஸ்கெஸ்" ஸ்ரீலங்காவுக்கான தனது சமீபத்திய விஜயத்தின்போது, கிழக்கில் இடம்பெற்ற இடம்பெயர்வினால் இன்னல்படும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் சர்வதேச மனிதாபிமான சமூகம் தமது அமைப்புடன் இணைந்து வலுவாகச் செயற்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அவர் கிளிவெட்டி இடம்பெயர்ந்தோர் முகாமுக்கு விஜயம் செய்தபோது அம் முகாமில் வதியும் மக்களையும் அவர்களைக் கண்காணிக்கும் இராணுவத்தினரையும் சந்தித்தார்.

சர்வதேச சமூகம், ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் அவசிய தேவைகளை உடன் நிறைவேற்றவேண்டும்" என ஸ்கெஸ் வேண்டுகோள் விடுத்தார்.

உணவு, நீர், பொதுச் சுகாதாரம் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்" என்றும் அழைப்பு விடுத்த மெக்கப் இவ்விடயத்தில் பல்கான்ஸ், சோமாலியா, சூடான் ஆகிய நாடுகளில் தாம் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளை முன்னுதாரணமாகக் காட்டினார். - என்று பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (அ-1-சி)

## மன்னாரக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறார்.

இலங்கைக் கடற்படை இந்தச் சம்பவம் தொடர்பாக வெளியிட்டிருக்கும் தகவல்கள் வேறுவிதமானவையாகக் காணப்படுகின்றன.

வடமேற்கு கடற்பரப்பில் கற்பிட்டி பத்தலங்குண்டு கடலில் இந்த மோதல் இடம்பெற்றதாக கடற்படை தெரிவித்திருக்கிறது. மோதலில் கடற்புலிகளின் கடற்கரும்புலிப் படகு ஒன்றை கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தனர் என்று கடற்படைப்பேச்சாளர் கமாண்டர் டி.ஜே.பி. தஸநாயக்கா தெரிவித்தார்.

இந்தப் படகில் விடுதலைப் புலிகள் நால்வர் இருந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையின் 'வோட்ட ஜெற்' படகு ஒன்று சிறுசேதம் அடைந்தது என்றும் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் எனவும் கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

கடற்படையின் அதிவேக ரோந்துப் படகு அணியை கடற்புலிகளின் படகு அணி ஒன்று எதிர்கொண்டபோது அங்கு மோதல் மூண்டது எனவும் கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக்கடற்சண்டையில்சேதமடைந்த கடற்படையின் 'வோட்ட ஜெற்' படகு கற்பிட்டி கடல்துறைக்கு இழுத்து வரப்பட்டிருக்கிறது என்றும்,

கடற்படைத் தரப்பில் குறைந்தது நால்வருக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் சுயாதீன தகவல்கள் தெரிவித்தன.

கடற்படையின் 'வோட்ட ஜெற்' படகு மீது தற்கொலைத் தாக்குதல் நடத்த வந்த புலிகளின் படகே தாக்கி அழிக்கப்பட்டதாக கற்பிட்டி கடற்படை வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

முல்லைத்தீவில் கடற்புலிகளின் தலைமையகம் மீது விமானத்தாக்குதல் நடத்தி அதனைத் தகர்த்து விட்டதாக அரசுப்படைகள் கூறிய இரு தினங்களில் இந்தக் கடற்சண்டை இடம்பெற்றுள்ளது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான விய வருஷம் பங்குனித் திங்கள் 24ஆம் நாள் (07.04.2007) சனிக்கிழமை முற்பகல் 10.47 மணி முதல் 12.30 மணிவரையுள்ள அனுஷ நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும், மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

தர்மராசா கனகாம்பிகை தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ரவீந்திரன்**
அவர்களுக்கும்



தயாளன் கமலேஸ்வரி தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**யாழினி**
அவர்களுக்கும்

திருவருளும் குருவருளும் கைகூட அன்பும் அறமும் சேர சுற்றமும் நட்பும் சூழ கன்னிகாதான மாங்கல்யதாரணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்) நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராராய் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் : 08.04.2007 ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் பி.ப. 3 மணியளவில் நடைபெறும்.

தங்கள் இனிய நல்வரவை நாடும்

திரு. க. தர்மராசா குடும்பத்தினர்,
பிளாக் வீதி,
சங்கானை.

திருமதி கமலேஸ்வரி தயாளன் குடும்பத்தினர்,
திருமதி ராஜேஸ்வரி செல்லத்துரை குடும்பத்தினர்,
25/8, அரசடி லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(59336)

(இருவீட்டார் அழைப்பு)

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

## தவறிவிட்டது

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ஜெகநாதன் லலிதாம்பிகை என்பவருடைய தே.அ. அட்டையும் (716440583 v), விசேட அ.அட்டையும், ஜெகநாதன் பரணீதரன் என்பருடைய பாடசாலை அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப் பை பொஸ்கோ பாடசாலைக்கும் கோவில் வீதிக் குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 399, மணிக்கூட்டு வீதி (ஜெகன் போட்டோ) யாழ்ப்பாணம், தொ.பே 222 3552 எனும் முகரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

**N.C.A கல்வி நிலையம்**
கே.கே.எஸ் றோட், இணுவில்.

**A/L 2009**
**கலை, வர்த்தகம்**

புதிய பிரிவு ஆரம்பம்
07.04.2007 சனி மாலை 3மணி

Note:கடந்த வருடம் O/L பரீட்சையில் அனைத்து மாணவர்களும் (100%) சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்
22 ' 11 ' 1950
விண்ணில்
08 ' 03 ' 2007

அமரர்
### சின்னத்தம்பி - சுப்பிரமணியம்
(நாவற்காடு, அச்சுவேலி)

உற்ற மனையாளும், உடன் பிறந்தோரும்,
பெற்ற பிள்ளைகள் தாமும் சுற்றமும் சேர்ந்தே,
உனையிழந்து தவிக்கின்றோம்.....
விருப்புடனே நட்ட பயிர் விளைந்தும் - அது
வீடு வந்து சேர முன்னே - அப்பா
விண்ணுலகு விரைந்த செய்தி நள்ளிரவில்
நம்மை கதிகலங்க வைத்ததென்ன...
அப்பாவின் ஆத்மா சாந்தி பெற்றிடவே
காலமெல்லாம் காட்டுமலைக் கந்தன்
கருணைதனை வேண்டி நிற்போம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி/4888)

கடந்த 08.03.2007 அன்று திடீரென இறையடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.04.2007) சனிக்கிழமை பகல் எமதில்லத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவற்காடு, அச்சுவேலி தெற்கு. தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## ஸ்ரீ ஜெகதீஸ்வரம் மூத்தசிவன் தேவஸ்தானம்
## கோயில்தோட்டம்-அல்வாய்
## மண்டலாபிஷேக பூர்த்தி - சங்காபிஷேக நிகழ்வு

**காலம் : நாளை (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணி.**

தலைமையேற்று நடத்துவிப்பவர்:

சிவாகம சித்தாந்த ஞானபானு - பிரதிஷ்டா அலங்கார சித்தாந்த சாகரன், பிரதிஷ்டா சிரோமணி
சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்
பிரதம குரு, வல்லை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.

சங்காபிஷேக பிரதம குரு : சிவஸ்ரீ இந்திரராஜா குருக்கள்
பிரதம குரு : இந்திரன், அம்மன் தேவஸ்தானம், நுன்னாலை.
ஆதின கர்த்தர் : ஸ்ரீமதி செல்லம்மா செல்லத்தம்பி வம்சாவழியினர்.
பிரதமகுருவும் பரிபாலகரும்: சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர் வம்சாவழியினர்.

**சங்காபிஷேக உபயம் :**
திரு.திருமதி அ.ஸ்ரீதரன் குடும்பத்தினர் (கனடா).

(59311)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா மகேஸ்வரன்



தாவடியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, விறகு காலைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகேஸ்வரன் 05.04.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னத் தங்கச்சி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - ஆசை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கலைவாணியின் அன்புக்கணவரும் கலேஸ்வரன், கலேஸ்வரி, ரதீஸ்வரன், ரதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, இரத்தினம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் வரதராசா, ஜெகநாதன் (யா/மானிப்பாய்...), தயாழினி, யாழினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2007) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

120, மானிப்பாய் றோட்,
ஜின்னா வீதி, யாழ்ப்பாணம். (59345)

தகவல்:
பிள்ளைகளும் மருமக்களும்.

## சிவஞானம் இராஜேஸ்வரன்

**(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், L.G.S.C. கொழும்பு, தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில், தர்மகர்த்தா, நல்லூர் ஸ்ரீ கொன்றையடி வயிரவர் தேவஸ்தானம், உரிமையாளர், ஈஸ்வரி ஆலை, நல்லூர் சந்தை.)**



திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் இராஜேஸ்வரன் 05.04.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், செங்குந்த இந்துக்கல்லூரி) கணவரும் காலஞ்சென்ற சிவஞானம் - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் திருமதி ஜெகன் மோகன் கல்யாணி (கனடா), மயூரன் (வீரகேசரி), வசிகரன் (நிதிக் கிளை, யாழ். பல்கலைக்கழகம்), பரதன் (B.SC. Hon.Quantity Surveying, மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் பா.ஜெகன் மோகனின் (கனடா) மாமனும் அஞ்சனா, அர்ஜன்கரிஸ் ஆகியோரின் பேரனும் பேரின்பநாதன் (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்), திருமதி ஜெயகௌரி செல்வராஜா, பாலஸ்கந்தா (பொறியியலாளர், கனடா), ஜெகதீஸ்வரன் (முன்னைநாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், நெல் சந்தைப்படுத்தும் சபை) ஆகியோரின் சகோதரனும் Dr.பரராஜசிங்கம் (உரிமையாளர், இரத்தினசபாபதி அன் சன்ஸ், யாழ்ப்பாணம்), விமலாதேவி (ஆசிரியர், O.L.R பாடசாலை, யாழ்ப்பாணம்), இலங்கரத்தினா (L.W. பிரதேச செயலகம், மட்டக்களப்பு), காலஞ்சென்ற லைலாதேவி மற்றும் சந்திராதேவி, குணரெட்னா (உரிமையாளர் சிவபதி புடவையகம், யாழ்ப்பாணம்), செல்வராசா (சவுதி அரேபியா), சிவபாலராஜா (பொது சுகாதார பரிசோதகர், முல்லைத்தீவு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.04.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.10மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல, 105,கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (59362)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பகீரதி யசோதரன்



விஸ்வகுல வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் 212, கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகீரதி யசோதரன் நேற்று (06.04.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சின்னத்துரை யசோதரனின் (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி)அன்பு மனைவியும் தேவராசா (இளைப்பாறிய ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி)- தேவமணி தம்பதியரின் அன்பு மகளும் பகீரதன் (G.T.Z), பரணீதரன் (T.O, கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), பிரியதர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜிர், ஹரணி ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி ப.வித்யாவின் (கோப்பாய் ஆசிரிய கலாசாலை) அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.36, செட்டித்தெரு, நல்லூரில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (07.04.2007) சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

36, செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
ந.தேவராசா (தந்தை)

**The Express Institute**
Irupalai, Kopay.

## O/L 2007 துரித மீட்டல் வகுப்பு

ஏப்ரல் 20 இல் ஆரம்பம்

**The Express Institute**
Irupalai, Kopay.

## வீடியோ படக்கொப்பி

SUN T.V., K.T.V. படக்கொப்பிகள் விற்பனைக்குண்டு.
மானிப்பாய் றோட், பெரிய மதவடி, உடுவில்.
**NEW R.S.K FARM**
(59283)

## தவறிவிட்டது

வேதநாயகம் அலன் என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டை என்பன ஆனைக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் குளப்பிட்டி றோட், உயரப்புலம், ஆனைக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் சி.யசோதரன் அவர்களின் துணைவி **பகீரதி** அவர்கள் காலமானதையிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் சமூகம் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி தம்பித்துரை நாகரெத்தினம்

தோற்றம்: 01.05.1925
மறைவு: 08.03.2007

எங்கள் உள்ளமெல்லாம் உறைந்திருக்கும்
எங்கள் அன்புத் தெய்வமே!

இன்று (07.04.2007) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

114/14, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (59365)

குடும்பத்தினர்.

**O/L பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களே! எம்முடன் இணையுங்கள்**

**எடிசன் அக்கடமி**
**யாழ்ப்பாணம்**

**O/L DAY CLASS 2007**

ஆரம்பம்:09.04.2007 காலை 8 மணி
அனுபவம் வாய்ந்த திறமையான ஆசிரியர் குழுவுடன்,
அமைதியான சூழலில்.....

**எடிசன் அக்கடமி.**
**யாழ்ப்பாணம்.**
(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை முன்பாக) நிர்வாகி.

# மரண அறிவித்தல்

## திருமதி மார்க்கண்டு ஆச்சிப்பிள்ளை



இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு ஆச்சிப்பிள்ளை 04.04.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2007) சனிக்கிழமை பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வைகுந்தவாசம்",
பழைய வீதி, இருபாலை. (593..)

தகவல்:
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் இரத்தினசிங்கம்

கொக்குவிலை பிறப்பிடமாகவும் ஏறாவூரை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் இரத்தினசிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் வீரசிங்கம் தம்பதியரின் மகனும் கந்தையா தம்பதியரின் மருமகனும் சரஸ்வதியின் கணவரும் காலஞ்சென்ற ரட்ணகுமார் மற்றும் புனிதகுமார், கேசவர்த்தனன் ஆகியோரின் தந்தையும் கிளி, யோகரட்ணம், காலஞ்சென்ற லோகேஸ்வரன், லோகேஸ்வரி, இராஜசிங்கம், சந்திரலேகா, கலாரஞ்சினி, நிகிலாவதி (றதி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.04.2007) வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குழங்கரைலேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
சு.விஜயகாந்தன் (மைத்துனர்).

## சுப்பிரமணியம் சச்சிதானந்தம்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் முன்னர் கரவெட்டியிலும் தற்போது அச்சுவேலியிலும் வசித்தவரான சுப்பிரமணியம் சச்சிதானந்தம் நேற்று (06.04.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கமலாம்பிகை தம்பதியரின் மூத்த மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சுதாகரன், சசிகரன், பிரபாகரன் (பிரான்ஸ்), சுதாஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனேஸ்வரி, வசந்தராணி, ரேணுகாந்தி, ராஜகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராஜவீதி,
தோப்பு, அச்சுவேலி.

தகவல்:
இராஜேஸ்வரி (மனைவி).

## திருமதிபேதுருப்பிள்ளை பிலோமினா



பலாலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேதுருப்பிள்ளை பிலோமினா 05.04.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பிலிப்பு - எலிசபெத் தம்பதியரின் அன்பு மகளும் மத்தேயு - ஆரோக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான சலோசப்பு, செல்வநாயகம்(ஆசிரியர்), ஞானமுத்து - நீற்றம்மா மற்றும் சிமியோன் - குணகுந்தம்மா, P.K.மத்தியாஸ் (ஓய்வுபெற்ற உதவி அரச அதிபர்), இம்மானுவேல், செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான றோசம்மா, பாவிலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் மங்களேஸ்வரி, மேரிலூசியா, அலன் றோஸ், எட்மன்(மகாரசா நெல்லியடி), யோசப் எடிசன், யசிந்தா, மரீனா, கிஸ்ரீனா, காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் ஸ்ரீபன், சாள்ஸ் டார்வின் ஆகியோரின் பாசமிகு தாயும் பெனடிற், அல்வீனஸ், அமலசோதி, வினோதாரணி, ஸ்கூர்மன் (பிரான்ஸ்), டேவிற், பேடினன், மரியதாஸ், அலங்காரம் ஆகியோரின் பாசமிகு மாமியும் யூட்குயின்ரஸ் (கெயர்), கிறிஸ்ரி (அன்ரோ ரொக்ஸ் திருமலை), அல்வின் (எகட்), பெர்னான்டோ(கல்வியற்கல்லூரி, வவுனியா), அலோடியா (B.F.A), ஆன்அலன்ரீனா (வெளிவாரி மாணவி), குயின்அவன்ரீனா, அலன்பீற்றர், செபஸ்ரீனா, றோயல், குருசாந், டொனால்ட்,ஜெஷீறன்,ருலக்சியா, மேவின், அன்ரனி,பவுஸ்ரீனா, அந்துவான், ஜெறோம், றொசான், சஞ்சுவான், ஜெனுசன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அன்ரோவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(07.04.2007) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம். (59345)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறுமுகம் விநாயகமூர்த்தி

**(இலங்கை மின்சார சபை)**

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விநாயகமூர்த்தி 05.04.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னம்மா தம்பதியரின் மகனும் சுப்பிரமணியம் சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் பவானியின் அன்புக் கணவரும் சுவேந்தினி, சாந்தினி, சர்மிகா ஆகியோரின் பெரியதந்தையும் ஜெனார்த்தரனின் மாமனும் டினுஷயன், அம்சனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(07.04.2007) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் சிறுப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி,
தொ.பே.: 077 6914129 (59352)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ஜெயபூபதி குலசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆங்கில சேவைக்கால ஆலோசகர், வடமராட்சி வலயம்)**



புலோலியைச் சேர்ந்தவரும் தற்போது 214, கச்சேரி நல்லூர் வீதியில் வசித்தவருமாகிய திருமதி ஜெயபூபதி குலசிங்கம் 05.04.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இலக்கணநாயகம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - ஆச்சிப் பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற குலசிங்கத்தின் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) அன்பு மனைவியும் கிருஷாந்தி(ஆசிரியை, நல்லூர் தெற்கு, ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்), திருமதி சுஷாந்தி சத்தியமூர்த்தி (லண்டன்), வசீகரன் (முகாமையாளர், எக்ஸ்போஏயர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் ரி.சத்தியமூர்த்தி (லண்டன்), திருமதி வ.சுபத்திரா (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் புருஷோத்தின் அன்புப் பேர்த்தியும் அமரர் இராஜேஸ்வரன், அமரர் பு.சுபத்திரா, சாம்பசிவம், திருமதி சறோஜினி, க.கணேசராணி, திருமதி சிவாஜினி சிவகுமார், திருமதி கிருஷ்ணவேணி பகவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை(08.04.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

214, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2438 (59354)

தகவல்:
கு.வசீகரன்
(மகன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org